# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 39 இதழ் 05 2023 - வைகாசி மாத பதிப்பு


# சர்வதேச தொழிலாளர் தினக் கொண்டாட்டம்





இம்முறை சர்வதேச தொழிலாளர் தினக் கொண்டாட்டமானது, தொழில்புரியும் மக்களின் ஒன்றிணைந்த மே தினப் பேரணி மற்றும் அணிவகுப்பானது, தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், சட்ட வல்லுநர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய வெகுஜன அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து கொழும்பு பீ.டீ. சிரிசேன மைதானத்தில் இடம்பெற்றது. இதற்காக டாபிந்து கூட்டு ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக, கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிராளர்கள் பங்குபற்றியதுடன், டாபிந்து கூட்ட ஒன்றியம் கொண்டாடிய முதலாவது சர்வதேச தொழிலாளர் தினம் இதுவாகும்.

இங்கு தற்கால நெருக்கடிக்கு மத்தியில், தனது உரிமைகளுக்காக ஒன்றிணைவதன் முக்கியத்துவம் பற்றியும், மக்களுக்கு எதிரான அரசாங்க அடக்குமுறைகள் மற்றும் தற்கால பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மக்களின் மீது சுமத்தப்பட்ட மற்றும் மக்கள் முகங்கொடுக்கின்ற அழுத்தம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த நாட்களில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் பின் அடக்குமுறை சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி, மக்கள் பேரணியை தோற்கடிப்பதற்காக புதிய அடக்குமுறை சட்டத்தை இயற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமைப்பு ரீதியாக எழுந்து நிற்கும் பொறுப்பு மக்களிடம் இருப்பதாக இங்கு வருகைதந்த வெவ்வேறு தொழிற்சங்கங்கள் மூலம் கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டன.

**கீழ்க்குறிப்பிட்ட வேண்டுகோள்கள் இங்கு முன்வைக்கப்பட்டன.**

- நாட்டிலிருந்து சொத்துக்களை சட்டவிரோதமாக வெளியேற்றுவதை நிறுத்தவும்.
- வெளியேற்றப்பட்ட பொருட்களை மீண்டும் நாட்டிற்குள் கொண்டுவருவதை தவிர்க்கவும்.
- மக்களின் அடக்குமுறைக்கு கொண்டுவரப்படும் ATA, PTA தடை செய்.

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – சமூக உரையாடலில் அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகள்

பக்கம் 04 – வணிகர்கள் ஆளும் நுகர்வோர் சமூகம்

பக்கம் 06-07 – எமது பணி

பக்கம் 09 – வெளிநாட்டு செய்தி, பௌத்த நாட்டில் மனித நடத்தையின் போக்கு எவ்வாறானது?

பக்கம் 10 – எமது எண்ணம்,

பக்கம் 11 – ஆரோக்கியம்

**வியர்வைத்துளி கூட்டமைப்பு**
221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:

# பொருளாதாரத்தின் முதுகெலும்பான ஆடைத் தொழிற்சாலை சரிந்து வீழ்ந்தது

கடந்த சில தசாப்தங்களுக்கு முன், இலங்கையில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக ஆடைத் தொழிற்சாலைப் பிரிவு இருந்ததுடன், அதன் உற்பத்தி செயற்பாட்டில் முதன்மை இடம் வகித்தது, இளம் பெண் தொழிலாளர்கள் ஆவர். 2020ம் ஆண்டு முதல் தற்போது வரை தொழிலாளர்களுக்கு தமது தொழில்முறை வாழ்க்கை பிளவுபட காரணமாக இருந்தது, கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியாகும். உரிமையாளருக்கு ஏற்படும் அனைத்து சவால்களிலிருந்தும் மீள்வதற்கு தொழிலாளர்கள் நேரடியாக நட்டத்தை அனுபவிக்க நேரிடுகின்றது. சம்பள வெட்டு, சம்பளத் திருட்டு, மேலதிக நேர கொடுப்பனவை இழத்தல், தொழில் நீக்கம் செய்தல், தொழிற்சாலையை மூடுதல், நலன்புரித் தொகை உட்பட உற்பத்தி டார்க்கட் ஐ அதிகரித்து தொழிலினுள் அதிக மன அழுத்தத்தை தாங்கிக் கொண்டு சேவை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், கடுமையாக நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்துள்ளது.


இந்த நிலைமையினுள் உலகத்தில் விசேடமாக, எமது ஆடைத் தொழிற்சாலைப் பிரிவு ஏற்றுமதியானது, அதிகளவில் மேற்கொள்ளப்படும் மேற்கத்தேய நாடுகளுள் ஒன்றான அமெரிக்காவில் நிகழும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆர்டர்கள் 25வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக தொழிலதிபர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வானது பொருளாதார சரிவுக்கு காரணமாக அமைந்தாலும், தற்காலத்தில் தளர்வு சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் கூறுவதைப் போன்று முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் என்பது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உண்மையான நிலைமையல்ல. எமக்கு தென்படுவதைப் போன்று, நிலையற்ற வரிக் கொள்கைகள் மற்றும் மின்சாரக் கட்டண விலை அதிகரிப்பு போன்ற விடயங்கள் தொழிற்சாலையை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு உரிமையாளர் ஏற்க வேண்டிய செலவுகள் தொடர்பான பிரச்சினையானது பிரதான காரணமாக இருத்தலென்பது யதார்த்தமாக இருந்தாலும், இதனடிப்படையில் உரிமையாளரை ஈர்க்கும் வகையில் தொழிலாளரை படுகுழிக்கு இட்டுச் செல்லும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சட்ட விரோத மற்றும் ஜனநாயக விரோத செயலாகும். நெருக்கடியை காரணமாகக் கொண்டு, தொழிற்சாலைகளை மூடுவதற்கு காத்துக் கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு அதிலிருந்து இலகுவாக விடுபட்டுச் செல்வதற்கான வழியொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதை தவிர, அது முதலீட்டை ஈர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஓர் முயற்சியல்ல.

1ஆம் பக்கத் தொடர்ச்சி **சர்வதேச தொழிலாளர்...**

- மக்களின் சொத்துக்களை விற்பனை செய்வதை உடனே நிறுத்து.
- வடக்கில் மற்றும் தெற்கில் மக்களின் காணி மற்றும் இடங்கள் கொள்ளையடிப்பதை உடனே நிறுத்தவும்.
- பணவீக்கத்திற்கு ஏற்றதான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவொன்றை பெற்றுத்தரவும்.
- அரச அடக்குமுறையை உடனே நிறுத்து
- தொழிலாளர் சட்ட சீர்த்திருத்தத்தை மீளப் பெற்றுத் தரவும்.
- IMF ஒப்பந்தங்களுக்கு EPF, ETF ஐ இரையாக்க வேண்டாம்.
- நியாயமற்ற வரிகளை சீர்த்திருத்துங்கள்.
- எக்ஸ்பிரஸ் பர்ள் வரியை உடனே பெற்றுத்தரவும்.
- பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும்.
- ஆட்சியாளர்களினால் உருவாக்கப்படும் இன, மத பேதத்தை தோற்கடிக்கவும்.
- சுற்றுச் சூழல் அழிவுபடுத்துவதை உடனே நிறுத்து.
- C-189 மற்றும் C-190 பரிந்துரைகளை அங்கீகாரப்படுத்தவும்.
- அரசாங்கம் உட்பட அனைத்து பொருளாதார குற்றவாளிகளுக்க தண்டனை வழங்கு.
- அடிப்படை தேவைகளை பெயரிடுகின்ற தொழிற்சங்க உரிமைகளை அடக்குமுறைப்படுத்துவதை நிறுத்து.
- விவசாய மக்களின் காணிகளை கொள்ளையிடுவதை தவிர்க்கவும்.
- உள்ளூராட்சி மற்றும் உள்ளூரட்சி மன்ற தேர்தலை உடனே நிறுத்து.
- காணாமலாக்கப்பட்டோருக்கு நீதியை பெற்றுத் தரவும்.
- IMF மற்றும் அரசாங்கத்தில் போலியான சமூக பாதுகாப்பிற்கு பதிலாக, உண்மையான சமூக பாதுகாப்பை உருவாக்க வேண்டும்.
- தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்து, சமுதாய பாதுகாப்பிற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சொற்பொழிவின் போது, ஏற்படும் மொழிப்பிரச்சினைக்கு சுதந்திரம் பெற்றுத்தரவும்.
- அனைவரதும் கல்வி மற்றும் சுகாதார உரிமைகளை உறுதிப்படுத்து.
- நாட்டினுள் நிலவும் ஔடத பற்றாக்குறைக்கு தீர்வு பெற்றுத்தரவும்.








# அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகளை தோற்கடிக்கும் நோக்கில் டாபிந்து கூட்டு ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூக கலந்துரையாடல்

தற்கால அரசின் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் நெகிழ்ச்சிமிக்க தொழிலாளர் சட்டத்தை சீர்திருத்தும் நோக்கில் தொழிலாளர் உழைப்பை சுரண்டல் மற்றும் உரிமையாளருக்கு ஏற்ற வகையில் தொழிலாளர்களை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொவிட் தொற்றுக்கு மத்தியில் தொழில் இழப்புக்களுக்கு முகங்கொடுத்த தொழிலாளர் சமூகத்தினருக்கு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாணலியில் விழுவதற்கு நேர்ந்துள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில், எட்டு மணித்தியால வேலை நேரத்தை இல்லாதொழித்து பெண் தொழிலாளர்களுக்கென நடைமுறையில் இருந்த பாதுகாப்பு சட்டத்தை நீக்கி, மேலதிக வேலை நேர கொடுப்பனவை இல்லாதொழித்து, காலகட்டமாக வணிக குழுவிற்கு தடையாக இருந்த தொழிலாளர் சட்டத்தை இரத்து செய்வதே அரசாங்கத்தின் ஓர் முயற்சியாக இருந்தது. அத்தோடு GSP+ வரி கொடுப்பனவு பெறுவதற்கும், இச்சட்ட சீர்த்திருத்தின் மூலம் ஏற்படும் தடைகளை தடுப்பதற்கும் முடியாத நிலை காணப்படுகின்றது. அத்தோடு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் ஒன்றியத்தின் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்குள்ள அரசியலமைப்பு உரிமை என்பன கடுமையாக மீறப்பட்டுள்ளது. அரசின் இவ்வாறான தன்னிச்சையான செயல்களை தோற்கடிப்பதற்காக சமூக உரையாடலொன்றை முன்னெடுப்பது மிகவும் உகந்த ஓர் விடயமாகும்.

டாபிந்து கூட்டு ஒன்றியத்தினால் ''அடிமைத்தன முறையை தோற்கடிப்போம்'' என்ற கருப்பொருளின் கீழ் 2023ம் ஆண்டு வைகாசி மாதம் 24ம் திகதி பி.ப 2.00மணி முதல் 5.00மணி வரை கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ள ரேணுகா ஹோட்டலில் இச்சமூக கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் பேச்சாளர்களாக, வழக்கறிஞர் லக்மாலி ஹேமச்சந்திர அவர்களும், உச்ச நீதி மன்ற வழக்கறிஞரான ஜயந்த தெஹிஅத்தகே மற்றும் கலாநிதி சேபாலி கோட்டேகொட அவர்களும் கலந்து கொண்டனர். பெண்கள் உரிமை மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்காக ஒவ்வொரு முறையும் முன்வருகின்ற சுதந்திர தொழிலாளர் வழக்கறிஞரான லக்மாலி ஹேமசந்திர அவர்கள் தொழிளர் சட்டம் மற்றும் சட்ட சீர்த்திருத்தம் ஆகிய தலைப்புக்களின் கீழ் சொற்பொழிவாற்றியதுடன், உச்ச நீதி மன்ற வழக்கறிஞரான ஜயந்த தெஹிஅத்தகே அவர்கள் பயங்கரவாத சட்டம் என்ற தலைப்பின் கீழ் தனது சொற்பொழிவை நிகழ்த்தினார். மகளிர் மற்றும் ஊடக கூட்டமைப்பின் ஊதியமற்ற பாதுகாப்பு சேவை தொடர்பாக சமூக உரையாடலை முன்னெடுத்துச் சென்ற பெண் தலைமைத்துவத்தின் ஆரம்பகர்த்தாவாகிய கலாநிதி சேபாலி கோட்டேகொட அவர்கள் ஊதியமற்ற பாதுகாப்பு சேவை மற்றும் பொருளாதாரம் என்ற தலைப்பின் கீழ் தனது சொற்பொழிவை நிகழ்த்தினார். டாபிந்து கூட்டமைப்பின் நிர்வாக இயக்குனரான சமிளா துஸாரி அவர்கள் ஆடைத் தொழிற்சாலைப்பிரிவின் தற்கால நிலைமை குறித்து சிறிய விரிவுரையொன்றை நிகழ்த்தியதுடன், கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, இரு பெண் தொழிலாளர்கள் கலந்து கொண்டதுடன், தமது தொழிற்சாலையில் நிலவும் தற்போதைய நிலவரம் மற்றும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

வழக்கறிஞர் லக்மாலி ஹேமச்சந்திர அவர்கள் அரசு, தொழிலாளர் மற்றும் முதலாளி ஆகியோருக்கு இடையில் நிலவும் உடன்பாட்டுடன் சட்ட அமுலாக்கம் மற்றும் பரிந்துரைகளை மேம்படுத்தல் தொடர்பில் தமது விரிவுரையை ஆரம்பித்ததுடன், சட்டவிதிகள் மீறப்படுவதற்கு காணப்படும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்வதற்கு மற்றும் தொழிற்சாலையை சுமுகமான முறையில் நடத்திச் செல்லல் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. அதுமட்டுமன்றி, தேசிய தொழிலாளர் ஆலோசணைக்

8ஆம் பக்கம் பார்க்க...




# வணிகர்கள் ஆளும் நுகர்வோர் சமூகம்

இன்று நீங்களும் நானும் வாழ்ந்து கொண்டிருப்பது நுகர்வோர் சமூகத்திலாகும். நுகர்வோர் சமூகம் என்பது நுகர்வோருக்கு இலாபகரமானதோர் சமுதாயம் அல்ல. நுகர்வோர், மோசடியின் மூலம் அல்லது பணத்தை தவறான பாதையில் செலவு செய்வதன் மூலம் உற்பத்தியாளர் அல்லது வியாபாரியினால் பணத்தை பறித்துச் செல்கின்ற ஓர் பொருளாதார சமூகமாகும். மக்கள் வாழ்வில் பெரும்பாலான விடயங்களை மிக சுலபமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என எண்ணி, பணத்தை கொள்ளையடிக்கும் ஓர் சமுதாயத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்களது மனம் பொய் மற்றும் மோசடியினால் சில நுகர்வோர் பொருட்களை வாங்குவதற்கு தூண்டவும் உங்களை நுகர்வோர் என்ற திருடன் மிகவும் தந்திரோபாய முறையில் இவ்வணிக சமூகத்திற்கு இட்டுச் செல்கின்றான்.

சமூகத்தில் மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசியமான விடயங்கள் நான்கு உள்ளன. அவை: உணவு, உடை, உறையுள் மற்றும் பாதுகாப்பு என்பனவாகும். நாளாந்த வாழ்கைக்கு அவசியமான இத்தேவைகள், குறைந்தளவிலே பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், வணிக சமூகமோ,அதை அதிகபட்சமான விதத்தில் பெற்றுக் கொள்ளச் செய்யும் தேவையை எம் அனைவருக்கும் உருவாக்குகின்றது. இதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் வெவ்வேறு தந்திரோபாய முறைகளை கையாளுகின்றனர். தினசரி மாதிரிகைகளை பயன்படுத்தி மக்களை ஏமாற்றுதல் மற்றும் முட்டாள்தனமான விளம்பரங்களை வெளியிடுதல், பரிசு வழங்குதலினூடாக நுகர்வோரை ஈர்த்தல் மற்றும் நுகர்வோரை மாய உலகிற்கு இட்டுச் செல்லல் போன்ற உபாயங்கள் இச்சமூகத்தினுள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது.

இவை அனைத்திற்காக செலவிடும் கோடிக்கணக்கான சொத்துக்கள் மீண்டும் நுகர்வோரிடம் இருந்தே பறித்தெடுக்கப்படுகின்றதென்ற உண்மையை நுகர்வோர் அறியாதிருக்கின்றார்கள். நாவிற்கினிய சுவை தருகின்ற, கண்களுக்கு களிப்பூட்டுகின்ற, மனதை மயக்குகின்ற இச்சமூகத்திற்கு கீழ் கோடிக்கணக்கான சொத்துக்கள் ஒழிந்து கிடக்கின்றன.

ஆர்ஜன்டினாவின் தலைநகரான புவனோர்ஸ் அயர்ஸ் பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்வி கற்கும் மாணவர்களை வரவழைத்து, கியூபா நாட்டுத் தலைவர் கெஸ்டோ நிகழ்த்திய உரையில், நுகர்வோர் சமுதாயம் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் சமுதாயம் என்பது, அபிவிருத்தி முதலாளித்துவத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடான விடயமாகும். உணவு, உடை, உறையுள் என்பன வாழ்வதற்கு அத்தியாவசியமானவை. ஆனால், வாழ்க்கைத்தரமானது அதைவிட பெறுமதிமிக்கது. அறிவோடு சேர்ந்து கலாசாரத்திலும் தான் வாழ்வின் தரம் அடங்கியிருக்கின்றது.

நுகர்வோர் சமூகம் உற்பத்தியாக்கப்படுவது, நுகர்வோர் கேட்டுநிற்கும் பொருட்களை விட வியாபாரிகளால் வாங்கத்தூண்டப்படும் (விலைசெலுத்தி) பொருட்கள் மற்றும் சேவைகளின் பேரில், வணிக சமூகத்திற்கு ஏற்படும் கேள்வி, உண்மையான கேள்வி அல்ல. அது வணிகர்களினால் உந்தப்படும் கேள்வியாகும். இங்கு முக்கியமாக திகழ்வது, பொருளொன்றின் தரமன்று. வெளியக கவர்ச்சியேயாகும்.

கண்களுக்கு களிப்பூட்டும் நிறங்கள் வர்ணமயமானவை. அதை விநியோகிப்பது, நுவர்வோரின் தேவைக்கன்றி, வணிகரின் தேவைக்கேயாகும். இந்த பொருளை வாங்குவதனால் நுகர்வோருக்கு அப்பொருளின் சுவையை விட உடல் நோய்களும் உற்பத்தியாளரால் வழங்கப்படுகின்றது. பரிசோதனை சேவை மற்றும் மருந்து விநியோகிப்பவர்களுக்கு வருமானத்தை ஈட்டுவதற்கான ஓர் வழிமுறையும் இதன்போது ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அதன்படி, நுகர்வோர் சமூகம் ஒரு பொருளை பெற்று அதன்மூலம் இருமடங்கு செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறான சந்தைப்படுத்தல் சமூகத்தில் நுகர்வோர் கட்டளைகள், சட்டங்கள், விலை கட்டுப்பாட்டை குறைந்தளவில் வயல்நிலப் பகுதி வேலையைக்கூட முறையாக நிறைவேற்ற முடியாது.

மைக்கல் சுகோட் என்பவரின் கூற்றுக்கமைய, முதலாளித்துவ சமூகத்தில் சந்தைவிலையை கட்டுப்படுத்துவதற்கு அரசிற்கு முடியுமாக இருந்தாலும், புதிய லிபரல்வாத சமூகத்தில் வணிகர்களால் அரசாங்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது. இன்று இலங்கை உட்பட உலகம் முழுவதும் நடைபெறுவது இவ்வாறான செயல்கள் தானே?

# ஆடைத்தொழிலாளர் குழுக்கள் பங்குகளை வாங்குவதற்கு எதிராக போராடுகின்றனர்




ஏழு நாடுகளின் ஆடைத்தொழிலாளர் குழுக்கள் பங்குகளை வாங்குவதற்கு எதிராக போராடுகின்றனர். சிரியாவில் மற்றும் ஐக்கிய அமரிக்காவில் ஏழு நாடுகளின் ஆடைத்தொழிலாளர் குழுக்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவவை மையமாகக் கொண்ட பிக் பெ'ன் சங்கத்தினால் பல ஆண்டுகளாக செலுத்தப்படாத சம்பள வேண்டுகோளின் பின்னர், பங்குகளை வாங்குவதை நிறுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வற்புறுத்தலுக்கு ஒன்றிணைந்துள்ளனர்.

இவ்வாரம், 50 அமைப்புக்களுக்கும் அதிகமான மற்றும் அவர்களின் பங்காளிகளான, ஏரியா ப்ளோர் வேஜ் எலியான்ஸ் மற்றும் சர்வதேச தொழிலாளர் ஒன்றியத்துடன் இணைந்து, NIKE தமது விநியோகத்தின் 9.3 மில்லியன் டொலர்களை செலுத்தமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது ஆரம்பிப்பது, சர்வதேச ஒருங்கிணையாளரான அனன்யா பத்தர்தாஜி அவர்க்ள் குடியரசு காங்கிரஸ் பிரதிநிதியான ஜீசஸ் சுயீ கார்சியா மற்றும் வோல் ஹோய்லே மூலம் ஒழுங்கமைக்கப்பட்டது, ஊடக கலந்துரையாடலின் பின்னராகும்.

ஊழியர் நலன்கள் சட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தும் பேரில், பங்குகளை வாங்குவது தடை செய்வதற்கு சட்ட உருவாக்கும் மற்றும் இவை முன்னரே தொழிலாளர்களின் பலத்தை தட்டிப் பறிக்கின்ற மற்றும் நிறுவனங்களின் சட்டைப்பைக்குள் பணத்தை சூறையாடுவது சட்டவிரேதாதமான செயல்களாகும்.

2021ம் ஆண்டில், NIKE ஆனது, தமது பங்குகளை கொள்வனவு செய்வதன் திட்டத்தை அதிகரித்ததுடன், 18 அமெரிக்க டொலர்களை மீண்டும் விலைகொடுத்து வாங்குவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. அப்பணத்தில் இருந்து NIKE ஆனது, தமது விநியோகத்தில் இருந்து 2000 மடங்கை தொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு சித்திபெற்றவர்களாக இருந்தனர்.

ஆசிய ஆடைத்தொழிற்சங்கம் மற்றும் ஏனைய அமைப்புக்கள் NIKE யிடம் கோரிக்கையிடும் விடயங்களாவன:

1. **பெண் தொழிலாளர்களுக்குள்ள விசேட விளைவுகள் உட்பட கொவிட் ஊதிய வேண்டுகோள் தொடர்பாக முறையான பரிசோதனைக்காக ஆடைத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.**
2. **அனைத்து ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தாம் இழந்த சம்பளத்தை மீண்டும் செலுத்தும்வரை இலாபம் மற்றும் பங்குகளை வாங்குவதற்கு பில்லியன் கணக்கில் செலவிடுவதை நிறுத்துங்கள்.**
3. **அனைத்து தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் செலவை செலுத்துவதற்கு அவர்களின் உலகளாவிய விநியோக சங்கிலி மாற்றுங்கள்.**

சஸ்கா

# மனநல விழிப்புணர்வு மாதம்

உலகளாவிய ரீதியில், மனநல அழுத்தம் மற்றும் பதற்றமடைதல் காரணமாக, ஆண்டுதோறும் 12 வேலைநாட்கள் இழக்கப்பட்டிருப்பது அறிக்கையிடப்பட்டிருப்பதுடன், உலகளாவிய பொருளாதாரத்திற்கு 1 ட்ரில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

இதற்காக எமது ஒத்துழைப்பு என்ன? எம்மால் செய்ய முடிந்தது என்ன?

தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் மனநல ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்காக மிகப் பயனுள்ள பயிற்சி உட்பட நிறுவனம் சார்ந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்தல், மனநல ஆரோக்கிய நிலைமையுள்ள மனிதர்களுக்கு அவர்களின் தொழில் வாழ்க்கையை முன்கொண்டு செல்வதற்கு ஆதரவளித்தல் போன்ற இவ்வாறான செயல்களின் மூலம் எமது வேலைத்தளத்தில் நீதி தொடர்பான கலாசாரம் மிக்க சூழலை உருவாக்க முடியும்.

பெட்டர் வர்க் ஸ்ரீலங்கா மூலம் தற்போது தேசிய செயற்றிட்டமொன்றை முன்னெடுக்கும் நோக்கில் இலங்கையில் ஆடைத் தொழிலை அண்மித்த மனநல ஆரோக்கியம் மற்றும் நன்னெறிமுறை காட்சியை வரைபடமாக வடிவமைத்துள்ளனர். இப்போது நாம் மனநல ஆரோக்கியம் மற்றும் நன்னெறிமுறையில் தேசிய முன்னெடுத்தலை நடத்துவதற்காக ஆலோசணை செயற்றிட்டமொன்றை நிறைவு செய்துள்ளதுடன், இதற்காக வரைபடமொன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

சுஜா

# வெசாக் தன்சல்





இம்முறை வெசாக் தினத்தை முன்னிட்டு டாபிந்து கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து டாபிந்து கூட்டமைப்பு வளாகத்தில் ஏற்பாடு செய்தனர். பிரதேச சுகாதார அலுவலர் திரு J.A.P. உதயங்க அவர்களின் பரிசோதனையின் கீழ் சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் ஓர் நிவாரணமாக



இருந்ததுடன், இந்நிகழ்வு குறித்து டாபிந்து கூட்டமைப்பிற்கு பிரதேசவாசிகளின் பாராட்டுக்களும் கிடைக்கப்பெற்றது. இச்செயற்றிட்டத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் பங்குபற்றினார்கள். டாபிந்து கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் தன்சல் நிகழ்ச்சி இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.





# மலையகம் 200

கி.பி 1823இல் மலையக தமிழ் மக்கள் இந்திய பிரதேசத்தை கடல் கடந்து இலங்கை வந்து, இவ்வாண்டுடன் அதாவது, 2023ம் ஆண்டிற்கு 200 ஆண்டுகள் நிறைவடைகிறது.

சுமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மலையகம் 200 நுவரெலியா சினெஸ்டா வளாகத்தில் இடம்பெற்றதுடன், இந்நிகழ்வின் ஆரம்ப தினத்தில் இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்ட ஒரு மாநாடாக இருந்ததுடன் மற்றும் 2023 மே மாதம் 19ஆம் திகதி ரேஸ் கோஸ் அரங்கில் கண்காட்சி நடைபெற்றது. 20 மற்றும் 21 ஆகிய இரு தினங்களில் பிரம்மாண்டமான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிய போதிய அறிவை வழங்க அவர்கள் பயன்படுத்திய உடை மற்றும் வாத்திய உபகரணங்களின் மூலம் இக்கண்காட்சியானது வெற்றிகரமாக நடைபெற்றது.

மலையக மக்கள் மூலம் பாராளுமன்றத்திற்கு மற்றும் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் மலையகம் 200 நிகழ்ச்சியில் கலந்து கருத்துக்களை தெரிவித்தனர்.

200 ஆண்டுகள் கடந்த பின்பும் அவர்கள் இன்றும் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவது முற்றுப்பெறவில்லை. அவர்கள் வசித்து வரும் அறைகளுக்கு இன்றுகூட ஒரு முகவரி இல்லை. உழைப்புக்கு ஏற்ற ஊதியமில்லை. குழந்தைகளுக்கு சிறந்ததொரு கல்வியை வழங்க ஒரு பாடசாலை இல்லை. உரிய போக்குவரத்து வசதி இல்லை. கிடைக்கின்ற உணவை உண்டு, நாளை கடத்தும் அவர்களுக்கு தனது அடிப்படை உரிமை பற்றிய அறிவு இல்லை.

இன்றைய காலத்தில் வெவ்வேறு வாக்குறுதி அழித்து சொகுசு வாகனங்களில் செல்லும் அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகளுக்கு கை தட்டி கரகோசமளித்திருந்த அவர்கள் அதற்கு மறுநாளிலிருந்து வழக்கம் போல தமது தொழிலை தொடர பேருந்தில் ஏறி கிராமங்களை நோக்கி தத்தம் பயணங்களை மேற்கொண்டனர்.

நதீபுரானி



# ரொஷேன் ஷானகவின் 12ஆவது நினைவுத் தினம்



EPF இற்கு எதிராக 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தொழிலாளர்களின் போராட்டத்தில் பொலீஸ் தாக்குதலில் உயிரிழந்த ரொ'ேன் 'ானக சகோதரரின் நினைவு தினமானது இம்முறை 01.06.2023 அன்று கட்டுநாயக்க எவரிவத்தை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் நடைபெற்றது.

அநீதியான முறையில் சுட்டுக்கொல்லப்பட்ட நிரந்தரமாக முடக்கப்பட்ட கூட்டத்திற்கு நீதி கிடைக்காத காரணத்தினால் நீதிபதி ஆணையகத்தால் நடாத்திச் செல்லும் ஆதார விசாரனை நீர்கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கும் காரணத்தினாலும் இந்நினைவு நாள் இம்முறை கட்டுநாயக்கவில் நடைபெற்றது.

இந் நிகழ்வு நடைபெற்று 12 ஆண்டுகள் கழிந்த பிறகும் இன்றுவரை எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. இன்றுவரை கிடைக்காமல் தள்ளிப்போகும் அந்நீதிக்காக மற்றும் தொழிலாளர் உரிமைகளை முறியடிப்பதற்காக கொண்டுவரும் சட்ட சீர்திருத்தத்திற்கு எதிராக சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் இது கொண்டாடப்பட்டதுடன் எவரிவத்தை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையிலிருந்து ரொஷேன் ஷானக நினைவுதின நிகழ்வன்று சகோதரர் ரொஷேன் ஷானகவின் தாய் மற்றும் காணாமல் போனோரின் குடும்பங்களின் ஒன்றியத்துடன் சகோதரர் பிரிட்டோ ரொ'ேன் ஷானகவின கூட்டமைப்பின் அருட்சகோதரி கிறிஸ்டீன் மற்றும் சகோதரர் சுகத் TGC கூட்டமைப்பின் லலிதா சகோதரி மற்றும் டாபிந்து கூட்டமைப்பின் சகோதரி சமிளா து'ாரி ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது. அதேபோல தொழிற்சங்கம் மற்றும் இளைஞர் நீதிச்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சகோதரி லக்மாலி ஹேமசந்திர மற்றும் சுவஸ்திகா ஆறுலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.





3ஆம் பக்கத் தொடர்ச்சி **மகளிர் தினக்...**



குழுவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு, சட்ட உருவாக்கலை தவிர்த்து தற்காலத்தில் காணப்படும் இருதரப்பு கொள்கையை பயன்படுத்தி, புதிய சட்ட உருவாக்குதல் தொடர்பாக செயற்பட்டதுடன், முத்தரப்பு கொள்கையானது வீழ்ச்சியடைந்துள்ள விதம் பற்றி மிகத் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. தொழிலாளர் ஆலோசணை குழுவுடன் சீர்த்திருத்த கலந்துரையாடலின் போது கலாசார ரீதியான பயன்பாட்டிற்கு பதிலாக அமைச்சர் வேறு குழுக்கள் மற்றும் வேறு நபர்களிடமிருந்து கருத்துக்களை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார். தற்போது உரிமையாளர்களின் சில அமைப்புக்களினால் நிகழ்கின்ற சட்ட சீர்த்திருத்தம் தொடர்பாக தொழில்துறை அமைச்சருக்கு பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட சீர்த்திருத்தங்களுள் சில பின்வருமாறு:

- **குறைவான இழப்பீடு வழங்கி தொழிலை நிறைவு செய்தல்.**
- **நிகழும் சட்டம் : ஒழுக்கம் எதிர்ப்பு செயல்களுக்கு மட்டும் அடிப்படையாகக் கொள்ளாது, சேவையை முடிவுசெய்யும் போது இழப்பீட்டுச் சூத்திரத்தின் கீழ் பதவிக்காலத்தின் படி, 2.5மில்லியனுக்கும் குறையாத இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு உரிமையுண்டு. (6ய அதிகாரத்தின் பேரில், தொழிலாளர்களின் சேவை நிறுத்தச் சட்டம், அதிவிசேட வர்த்தமானி (2216/17)**
- **முன்மொழியப்பட்ட சீர்த்திருத்தம் : முதலாளி தாம் விரும்பிய இழப்பீட்டை வழங்கி சேவை நிறுத்தம் செய்ய முடியும்.**
- **தொழிலில் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தல்.**
- **நிகழும் சட்டம் : ஒழுக்க எதிர்ப்பு செயற்பாட்டின் பேரில் காணப்படாதவிடத்து, தொழிலாளரை சேவையில் இருந்து நீக்குவதற்கு தொழிலாளரின் விருப்பம் அல்லது தொழில் ஆணையாளர் ஜெனராலின் அனுமதியைப் பெற வேண்டும்.**
- **முன்மொழியப்பட்ட சீர்த்திருத்தம் : முதலாளியின் சுய திர்மானத்தின் பேரில் தொழிலாளரை சேவை நீக்கம் செய்ய முடியும்.**
- **சம்பள பாதுகாப்பின்மை.**
- **நிகழும் சட்டம் : தொழிலாளரின் முழுச்சம்பளத்தை செலுத்துவதற்கு உரிமையாளர் கட்டுப்பட்டுள்ளார். முறையான தொழிலை பெற்றுக் கொடுத்தல் உரிமையாளரின் கடமையாகும்.**
- **முன்மொழியப்பட்ட சீர்த்திருத்தம் : உரிமையாளருக்கு தொழிலை பெற்றுக் கொடுக்க முடியாதவிடத்து, (நோய்த்தொற்று, மூலப்பொருள் பற்றாக்குறை) போன்ற காரணங்களால் பணியாளரின் சேவையை நிறுத்தி அரை சம்பளத்தை வழங்குதல்.**
- **வேலை தினத்தை நெகிழ்வுப்படுத்த மற்றும் அதிக நேரம் வேலை செய்வதை வழக்கமாக்குதல்.**
- **நிகழும் சட்டம் : வேலை வாரமானது, 15 மணித்தியாலங்கள் முதல் 48 மணித்தியாலங்கள் வரை காணப்படுவதுடன் (தொழில் நிலைமையை பொருத்து), நாளொன்றுக்கான வேலை நேரம் 8 மணித்தியாலங்களாகும்.**
- **முன்மொழியப்பட்ட சீர்த்திருத்தம் : வாரத்திற்கு 45 மணித்தியாலங்கள் முதல் 48 மணித்தியாலங்கள் வரை வேலை நேரமாவதுடன், தொழில்வாரத்தை நெகிழ்வுப்படுத்தல். இதனடிப்படையில் நாளொன்றுக்கு 12முதல் 14 மணித்தியாலங்கள் வரை சேவையில் ஈடுபட வேண்டும்.**

உச்ச நீதிமன்ற வழக்கறிஞரான ஜயந்த தெஹிஅத்தகே அவர்கள் சேவை நிறுத்த சட்டம், இழப்பீடு மற்றும் பயங்கரவாத சட்டம் தொடர்பில் கவனத்தை செலுத்தி விரிவுரையாற்றினார். பயங்கரவாத சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமானது, தற்காலத்தில் இது தொடர்பாக வரைவுகள் அமைத்தல் பற்றி கருத்து வெளியீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதுடன், இங்கு சட்டத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பான தவறான பயன்பாடுகள் குறித்தும் காணக்கிடைக்கின்றது. தற்கால சூழ்நிலையின்படி, பயங்கரவாதம் தொடர்பில், சட்டத்திற்குள்ள அவசியத்தன்மை இடம்பெறாமல் இருப்பதாலும் மற்றும் பொதுமக்களின் குரலெழுப்புதல் என்பவை அடக்குமுறைப்படுத்தலின் நோக்கம் என்பது மிகத்தெளிவாக காணப்படுகிறது. மேலும் தொழிற்சங்க அமைப்புக்களை நடைமுறைப்படுத்தும் போது, வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியிருப்பதுடன், பேச்சில் மற்றும் கருத்து வெளியீட்டின் போது, வாய்ப்புக்கள் கடுமையாக வரையறுக்கப்படுவதை எம்மால் காணமுடிகிறது. சேபாலி கோட்டேகொட அவர்கள் ஊதியமற்ற பாதுகாப்பு பொருளாதாரம் பற்றிய தனது கருத்தில் தற்காலத்தில் இடம்பெறுகின்ற சட்ட பாதுகாப்பு சேவையில் ஈடுபடுகின்ற பெண்களுக்காக முன்வராமை மற்றும் அதை அமுல்படுத்தாது இருப்பது தொடர்பிலும் தன் கவனத்தை செலுத்தினார். முறைசாராத வகையில் தொழிலாளர்கள் தொடர்பான சட்டங்களின் பொருந்தாத தன்மை தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. கலந்துரையாடலின் இறுதியில் பொது கலந்துரையாடலுக்கு இடமளிக்கப்பட்டதுடன், பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் தமது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். டாபிந்து கூட்டமைப்பானது தற்கால தேவைக்கான நோக்கத்தை இவ்வாறு பதிவு செய்ததுடன், அது இத்துடன் நின்று விடாது, மேலும் வரும் நாட்களில் முன்னெடுத்துவ் செல்வது அதன் நோக்கமாகும்.

**யசாரா விதுமிணி**

# வெளிநாட்டுச் செய்தி

2013ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி பங்பகாதேஸில் டாகா தலைநகருக்கு வெளியே அமைந்துள்ள எட்டு மாடியைக் கொண்ட ரனா ப்ளாசா கட்டிடம் உடைந்து விழுந்ததில் ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன், 2500இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். உலகளாவிய ரீதியில் பிராண்டுகளுக்காக ஆடைகளை உற்பத்தி செய்த தொழிற்சாலை இருந்த இக்கட்டிடத்தின் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு முன் எவ்வாறாயினும், கட்டிடத்தின் உறுதிநிலை தொடர்பில் ஒன்றும் அறியாமல் மறுநாள் காலை தொழிற்சாலைக்கு சமூகமளிக்குமாறும், இல்லையேல் தொழில் நீக்கம் செய்யப்படுவதாகவும் ஆடைத் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அவர்களின் விநியோகச் சேவையில், தொழில் பாதுகாப்பிற்காக பாரிய பொறுப்பையேற்க வேண்டிய பிராண்டுகளில் வெளிப்படையாக விளங்கும் விதிவிலக்குகள் காணப்படுகின்றன. விசேடமாக, ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதை நிராகரித்த Levizs" Gap" Walmart மற்றும் Amazon போன்ற ஐக்கிய அமெரிக்க அமைப்பானது இவ்வாறான தரங்களின் மீது கையொப்பமிடுவது அபாயகரமான நிலைமையிலிருந்து மேலும் ஆடை மற்றும் ஐவுளி தொழிலாளர்களை பாதுகாப்பதுடன், அது 2023ம் ஆண்டு ஐப்பசி மாதம் காலாவதியாகவிருப்பதால். இதனை புதுப்பிப்பதற்காக மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.



“சாது சாது”

# பௌத்த நாட்டில் மனித நடத்தையின் போக்கு எவ்வாறானது?



உலகில் தலைசிறந்த நாடு இலங்கை என சிறப்பிடம் பிடித்த எம் தாய்நாட்டினுள் பல்வேறு சாதி மற்றும் பல்வேறு மத, கட்சி பேதத்தில் இருந்து தமக்கு பிடித்த மதத்தை பின்பற்றுவதற்கு மற்றும் சுதந்திரமாக வாழ்வதற்கும் முடியுமாக இருந்தது.

ஆனால், சில காலமாக சாதி, இன, மத பிரச்சினைகள் உருவாகியிருப்பதுடன், மத நல்லிணக்கம், கட்சி பிளவுகள் போன்றவற்றால் நாட்டினுள் மிகக் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மது மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்வதுடன், மீண்டும் பராமரிப்பு கலாசாரம் மேலோங்க ஆரம்பித்துள்ளது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் வாழ்க்கை அழிந்துகொண்டு செல்வதை ஊடகங்கள் மூலம் தினமும் எம்மால் காணக்கிடைக்கின்றது. பௌத்தர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எமது நாட்டினுள் ஐந்து தவ வசனங்கள், கட்டளைகளையாவது முறையாக பின்பற்றுகிறார்களா? ஃசாது சாதுஃ என்று சொல்லிக் கொண்டு, மனித கொலை, மிருக கொலை என எத்தனை கொலைகள் இடம்பெறுகின்றன? என்னதான் பௌத்த போதனைகள் என சொல்லிக்கொண்டு இருந்தாலும், நாட்டினுள் எவ்வளவு பொய்கள் மற்றும் அடுத்தவர் உடைமைகளைத் திருடுதல மற்றும் மோசடி போன்ற விடயங்கள் இடம்பெறுகின்றன? அத்துடன், காமம் மற்றும் குடிபோதையில் விழுந்து சிறியவர் முதல் பெரியவர் வரை எத்தனை பேர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்? அப்போதனை, கட்டளைகள் ஐந்தையும் முறையாக பின்பற்றினால், சிறைச்சாலையினுள் கைதிகள் அதிகளவில் இருக்க மாட்டார்கள். இம்முறை வெசாக் தினத்தை விட பொசன் போய தினத்திற்கு அதிகமானோர் வெள்ளைநிற ஆடை அணிந்து வருகை தந்து எத்தனை பூஜைகள் இருந்தாலும் குறைந்தது ஐந்து கட்டளைகளையாவது முறையாக கடைபிடித்தால் நாட்டினுள் இவ்வாறான சீர்கேடுகள் நிகழ்ந்திருக்காது.

சமன்மலி

# எமது எண்ணம்

கடந்த மாதம் நீண்ட விடுமுறை கிடைத்தமையினாலும், என்னுடன் அறையில் இருந்த என் சக நண்பி வெளிநாட்டிற்கு வேலைதேடி சென்றமையினாலும். அறையில் தனியாக இருக்க விருப்பமின்றி ஊருக்குச் சென்றேன்.

வெசாக் மாதமாகையால் வீட்டின் இரு பக்கமும் வெசாக்கூடு தொங்கவிடப்பட்டிருப்பினும், மின்சாரக்கட்டணத்தின் விலை அதிகரித்தமையால், வீடு ஒளியற்று இருளாக இருந்தது. தன்சல்களில் மிக நீண்ட வரிசை காணப்பட்டது. முன்னைய காலங்களில் கொடியை காட்டி மக்களை தன்சல்களுக்கு வலுக்கட்டாயமாக அழைப்பார்கள் ஆனால், இப்போது அதற்கு அவசியமில்லை. பொருளாதார நெருக்கடியானது மக்களை எவ்வாறு வாட்டி வதைக்கிறதென்பதை அங்கு காணப்பட்ட நீண்ட வரிசையின் மூலம் காணக்கூடியதாக இருந்தது.

நாம் இந்த பூமியில் எவ்வளவுதான் வேலை செய்தாலும், பெறுகின்ற சம்பளத்தை வைத்து அனைத்தையும் சமாளிக்கும் விதம் எமக்குதான் தெரியும். சம்பள உயர்வு என சொல்லிக்கொண்டு திரிந்தாலும், எல்லாம் வெறும் வாய்ச்சொல் மட்டுமே.

பொருட்களின் விலையும் குறைதல் மற்றும் அதிகரித்தல் என மாறிக்கொண்டு செல்கின்றது. பெரும்பாலான தொழிளாளர் படை எமது நாட்டினுள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலும் நாட்டிலுள்ள அறிவாளிகள் நாட்டை விட்டு சென்றால், மீதமிருப்பது யாரென்று நினைத்துக் கொள்ள முடியும்.

இம்முறை தொழிலாளர் தினத்திற்கு அரசியல் கட்சியானது வழக்கம்போல் பல்றேு கொடிகளின் கீழ் நிகழ்வை நிகழ்த்தியது. எமது தொழிற்படையினர் மற்றும் மாற்று திட்டங்களைப் பற்றி ஒரு கதையுமில்லை. பல்வேறு அரசியல்க கட்சிகளின் மூலம் வருகைதந்து அவர்களின் சுகதுக்கங்களை புலம்பினார்களே தவிர, அதிலும் ஒரு கட்சியாளர் எம்மைப்பற்றி கொஞ்கம் பேசினார். ஆனால் அதிலும் ஒற்றுமையிருப்பதாக தெரியவில்லை.

தொழிலாளர் தினம் என்றால் என்ன என்பது சிலருக்கு தெரியாது. அன்று சிக்காகோ நகரிலுள்ள தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் எட்டு மணித்தியால சேவையைக் கோரி போராட்டம் நடத்தினாலும், துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனவர்களை நினைத்துதான் இதை மேற்கொண்டார்கள்.

எமது நாட்டில் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் தொழில்புரியும் தொழிலாளர்குழுவொன்று ETF தொடர்பான பிரச்சினையின்போது அதற்கு எதிராக தொழிலாளர்கள் மேற்கொண்ட போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு மற்றும் தாக்குதலுக்கு உள்ளானதுடன், துப்பாக்கிச்சூட்டுக்கு இரையாகி உயிரிழந்த ரொஷேன் ஷானக சகோதரரை இப்போது அனைவரும் மறந்திருப்பர். குறைந்தது அவரை நினைவுகூறுவதற்கான ஓர் நினைவுச்சின்னம் கூட அமைக்கப்படவில்லை.

பழைய சட்டங்களை நீக்கி, புதிய சட்டங்களை கொண்டுவரப் போகின்றார்களாம். ஆனால், சட்டமோ படுகுழிக்கு தள்ளப்படுகின்றது.

சமன்மலி

## கவிதை மழை

ஆசைகளை எல்லாம்
அடக்கி வைத்த ஏக்கம்

ஐந்து மணி நேர தூக்கம்
ஒரு மணி நேர சாலை பயணம்
ஒன்பது மணி நேரம் வரை
நீடிக்கின்ற என் பணியின் சாபம்

என்னை பார்ப்பவரின் ஏளனம்பறித்து எடுக்கிறது
மனதை பதற வைக்கிறது
மரியாதையின் மகுடம் வேண்டாம்
மனிதன் தானே என்ற மனம் போதும்

அழகாக நீ அணியும் ஆடையின்
பாதி கூட இல்லை என் ஊதியம்
அறிவாயோ அந்த ஆடையை
தைத்தவள் நான் என்று

அழகாக வாழ தான் - நான்
ஆசை கொள்கிறேன் - என்
சுய உழைப்பில் தான் - உழைத்து
ஊதியம் பெறுகின்றேன்

நிக்சன்

ஆரோக்கியம்

# இன்றே ஆரம்பித்து டெங்குவை ஒழிப்போம்



தற்காலத்தில் காணப்படும் சமூகப் பேரழிவாக டெங்கு நோய் காணப்படுவதுடன் அது உமது மற்றும் எமது வாழ்க்கையில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

தேசிய டெங்கு ஒடுக்குமுறை பிரிவு தொற்று நோயியல் ஆய்வுப் பிரிவு சுகாதார மற்றும் உள்ளூர் வைத்திய ஆணையகம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் இந்நிலையை குறைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறனர். அனைத்து அரச மற்றும் தனியார் வைத்திய காரியாலயங்கள் அதேபோன்று முப்படைகள் மற்றும் பொலிஸாரின் உதவிகளும் பாராட்டத்தக்கவை.

இலங்கையில் மட்டுமல்லாது, தற்போது ஆசியாவில் மற்றும் பல நாடுகளிலும் இப்பேரழிவு பரவிக் காணப்படுகிறது. சாதாரணமாக இது ஜீன் ஜீலை மாதங்களில் இடையிடையே ஏற்படும் தென் மேற்கு பருவ மழை காரணமாக தலைதூக்கி பார்த்து குறைவடைந்து சென்றாலும் மீண்டும் ஐப்பசி முதல் கார்த்திகை வரையான மாதங்களில் டெங்கு நுளம்பின் பரவல் பரவிச் செல்லும். ஆனால் இம்முறை நோயின் பரவல் அதிகமாக காணப்படுவது மிகவும் கவலைகரமான விடயமாக காணப்படுகிறது.

டெங்கு காய்ச்சலின் போது திடீரென்று ஏற்படும் கடுமையான காய்ச்சல் அதிகப்படியான தலைவலி மற்றும் பின்புற கண் வலி, மூட்டு மற்றும் தசை வலி போன்றவை ஏற்படும் அதே வேலை சில நோயாளர்களுக்கு உடம்பில் சிவப்பு நிற பரவல் தன்மை மற்றும் இரத்த வாந்தி வரும் நிலையும் காணப்படும்.

நோயாளி கீழுள்ள நோய் அறிகுறிகள் தென்படுமாயின், (முக்கியமாக காய்ச்சல் குறையும் பட்சத்தில்) கட்டாயமாக வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

- தொடர்ச்சியாக வாந்தி
- வயிற்று வலி
- அதிக தாகம்
- அதிக தூக்கம் மற்றும் மயக்க நிலை
- உண்பதற்கு விருப்பமின்மை
- கை கால் வெளிறுதல் மற்றும் குளிர்
- அமைதியின்மை
- தோல் நிற மாற்றம்
- சிறுநீர் கழிப்பில் ஏற்படும் குறைவு
- நடத்தை மாற்றம்

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் உங்களுக்கு காணப்பட்டால் 48மணி நேரத்திற்குள் இரத்த பரிசோதனை செய்தல் மிகவும் உகந்தது என வைத்திய ஆலோசணை குறிப்பிடுகிறது. அவ்வறிக்கை சாதாரணமானது எனில் அடுத்த 24மணித்தியாலத்தினுள் நீங்கள் சுகமடையாவிடின் மீண்டும் இரத்த பரிசோதனை செய்தல் வேண்டும். இந்த ஆபத்தான காலகட்டத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இரத்த பரிசோதனைக்கு ரூபா 250 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று தன் வீட்டில் அங்கத்தவர் யாராவது டெங்குவினால் பாதிக்கப்பட்டால் உடனடியாக தனது பிரதேச சுகாதார அதிகாரிக்கு அறிவிப்பது கட்டாயமாகும்.

டெங்கு நோய் முடிவடையாது பரவிக்கொண்டே போவதால் தான் ஊடகங்களிலும் அதன் தாக்கம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. எனவே அனைத்து ஊடகங்கள் முப்படைகள் மற்றும் அனைத்து மக்களும் ஒன்றுபட செயற்பட்டு டெங்கு நோயை முறியடிப்போம். இதனை தேசிய கடமைகளில் ஒன்றாக எண்ணி இன்றிலிருந்தே எம்மிலிருந்து ஆரம்பிப்போம். உமது வீடு மற்றும் வேலையிடம் என்பவற்றை தூய்மையாக வைத்து டெங்கு உயிர் கொல்லியை இல்லாதொழிப்போம்.

மூலம் - இணையம்



# தொழிலாளர் உரிமை மற்றும் தொழிற்சாலை

கடந்த காலம் முழுவதும் இலங்கையில் ஆங்காங்கே உருவாகும் புதிய லிபரல்வாதம் என கூறிக்கொண்டு திரியும் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், இலங்கையில் தொழிலாளர் சட்டவிதிகளை தளர்வு செய்வதனூடாக இலங்கைக்கு ஏற்றுமதி பெருக்கெடுத்து வரும் என்பதாகும். அவ்வாறில்லையேல், இலங்கைக்கு அந்நியசெலாவணியை பெற்றுக் கொள்வதற்குள்ள பிரதான தடையாக இருப்பது இலங்கையில் நிலவும் தொழிலாளர் சட்டமாகும்.

அதனூடாக கடந்த சில வாரங்களாக, இலங்கையில் தொழிற்சாலைகளை மூடுவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாக ஏதுவான காரணியாக, இத்தொழிலாளர் சட்டம் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எமது முதல் பத்திரிகையில் நாம் சுட்டிக்காட்டியுள்ளபடி, இலங்கையினுள் இடம்பெறும் தற்கால பொருளாதார கொள்கைகள் மற்றும் சர்வதேச கேள்வியில் காணப்படுகின்ற பாரிய பின்னடைவுடன் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்காக இலங்கை மேலும் ஓர் கவரப்படாத நிலையில் காணப்படுவதுடன், தொழிலாளர் சட்டவிதிகளை தளர்வு செய்யும் கொள்கையை இலங்கை அரசாங்கம் பின்பற்றுமாயின், அது இலங்கையில் தொழிற்சாலையை கலைப்பதற்கு காத்துக் கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு அது பெரும் அனுகூலமாகிவிடும். ஆகவே இதன் ஒரு முன்மொழிவாக ஏற்றுமதியை கொண்டுவருவதற்கு பதிலாக முதலீட்டாளர்கள் மிக வேகமாக இலங்கையை விட்டு செல்லும் நிலைமைக்கு வந்து விடுவார்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்த நேரத்தில், பெரும்பாலான வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது, குறைந்தளவு இலாப,நட்டங்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்திலாகும். மீண்டும் தொழிற்சாலையை கட்டியெழுப்புவதற்கு வியாபாரத்தில் பாரிய முயற்சியொன்றை மேற்கொள்வதற்கான முக்கிய காரணியாக அமைவது, வியாபாரத்தை விட்டுவிடுவதற்கு இழப்பீடு செலுத்தவேண்டியிருப்பதுடன், ஏற்க வேண்டிய செலவொன்றும் காணப்படுவதனாலாகும். அவ்வாறு இடம்பெறாதிருப்பதற்கு வியாபாரமொன்று நட்டத்தையேற்கும் போது அவற்றை மூடி, இலாப நோக்கை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்படுவதற்கு வியாபாரிகள் எண்ணுகின்றனர். அவ்வாறில்லையேல், நிறுவனமொன்று நட்டத்தை எதிர்நோக்கும் போது, அந்நட்டத்தை ஏற்று, வியாபாரத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு பதிலாக ஊழியர்களின் சம்பளத்தை வெட்டுதல், வேலை நீக்கம் செய்தல் மற்றும் உழைப்பை சுரண்டுதல் உட்பட அவர்களின் நட்டத்தை ஊழியர்கள் மீது சுமத்தி, இலாபத்தை மட்டும் பெறுவதற்கு வியாபாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

அத்தோடு இங்கு எழுப்பப்பட வேண்டிய ஓர் காரணமாக அமைவது, ஒரு வகையில் நிலவும் சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் மிகச் சுலபமாக சுரண்டலுக்கு ஆளாகின்றனர். மறுபக்கம், உலகில் 48 மணித்தியால வேலைநேரத்திலிருந்து 36-40 வரையான வேலைநேரமாக மாற்றியமைப்பட்ட காலத்தில், உலகில் “Fair Trade” “ Fair Labour” என்ற போக்கின் மூலம் நுகர்வோர் தமது நுகர்வுத் தேவைக்காக தமக்கு சுரண்டல் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக நியாயமான விலையொன்றை செலுத்துவதற்கு தயாராகின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக உலகத்திற்கு முன்னால், நீங்கள் விலைகொடுத்து வாங்கும் ஒவ்வொரு முறையும் அனைத்தும் இலங்கையில் உற்பத்தியாக்கப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு சாதாரண விலையில் அல்லது சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம் எனும் கருப்பொருளின் கீழ் சர்வதேச ரீதியில் சென்றடையுமாயின், முதலீட்டாளர்களை கவர்வதை விட நுகர்வோரின் வேண்டுகோளின் பேரில், முதலீடானது, இலங்கையை நாடி வரும் ஓர் நிலைமையை உருவாக்க முடியும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

**மூலம் - “பிரதிவாதம்” எனும் முகப்புத்தக பக்கத்தினூடாக எடுக்கப்பட்டது.**

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.